**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

**<u>O.S. No.185/2022</u>**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **வனஜா PW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன், எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **வனஜா** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெய ர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

21.01.2025

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 24.08.2018 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் வாதியின் பவர் ஏஜெண்டுக்கு அனுப்பிய அறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 28.09.2018 தேதியிட்ட வாதியின் பவர் ஏஜெண்ட் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 03.03.2016 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.1,00,000/−க்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 03.03.2016 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.1,00,000/−க்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகும். 03.03.2016 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.1,00,000/−க்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.5** ஆகும். 03.03.2016 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.1,00,000/−க்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

03.03.2016 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.1,00,000/–க்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 02.12.2019 தேதியிட்ட மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குரை திருப்பப்பட்டதற்கான மேல்குறிப்பு உத்தரவு நகல் **வா.சா.ஆ.8** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** .

(பிரதிவாதிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)